REGD. NO. M. 6911 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: பங்குனி 13உ செவ்வாய் (26—3—57) ★ ★ வெளியீடு: பங்குனி 14உ புதன் (27—3—57) [இதழ் 246

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
[ஏப்ரல் முதல் தேதியிலிருந்து]
★
மூன்று மாதம் ரூ. 6
ஆறு மாதம் ரூ. 12
ஒரு வருடம் ரூ. 24
தனி இதழ் 7 நயா பைசா
இலங்கையில் 10 சதம்

அகாலிதள-காங்கிரசு ஒற்றுமை சந்தி சிரிக்கிறது

சீக்கியர் ஒற்றுமையைச் சீர்குலைக்க காங்கிரசு செய்த சதி அம்பலம்

சீக்கிய தலைவர்களை விலை கொடுத்து வாங்கப்பட்டதாம்

அகாலி தளத் தலைவர் தாரா சிங் குற்றச்சாட்டு

அமிருதசரஸ், மார்ச் 25—

"காங்கிரசுக் கட்சியின் நலத்திற்காக சொந்தக் கட்சிக்குத் துரோகம் செய்துள்ள சர்தார் ரேர்வாலரவை காங்கிரசில் சேர்க்க, சனநாயகப் புறம்பான முறைகளை காங்கிரசுத் தலைவர்கள் மேற்கொண்டுள்ளனர்!

"அகாலிதளத்தில் பிளவுண்டாக்குவதற்காக சர்தார் ரேர்வாலர காங்கிரசுக் கட்சியால் விலைக்கு வாங்கப்பட்டுள்ளார்!

"ஒருவேளை இவ்வுண்மை, நேருவிற்குத் தெரியாமல் இருக்கக்கூடும். அகாலி தலைவர்களுடன் காங்கிரசு பேச்சு நடத்தியபொழுது, ரேர்வாலாவிற்குக் காங்கிரசு கொடுத்திருந்த கீழ்த்தரமான வாக்குறுதிகள் இரகசியமாக மூடிவைக்கப்பட்டிருந்தன."

—இத்தகவலை அகாலிதளத் தலைவர் தாராசிங் வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது :—

"காங்கிரசுக் கட்சி துவக்கத்தில் கொடுத்திருந்த வாக்குறுதிப்படி, அகாலிதளத்தில் செல்வாக்கு பெற்றிருந்த அகாலியர்களுக்கு, அவரவர் தகுதிக்கேற்ப தேர்தலில் இடமளிக்கவில்லை.

"கூறியிருந்தபடி காங்கிரசு அபேட்சகர்களின் இறுதிப் பட்டியல், என்னுடன் கலந்து உருவாக்கப்படவில்லை.

"அகாலி - காங்கிரசு இணைப்பு சீக்கிய மக்களின் ஒற்றுமைக்குப் பேரிடியாகும்.

"தங்களிடம் பலமும் ஆற்றலும் இருந்தால் அல்லாது, 'பஞ்சாபி சுபா'வினாலும் வட்டார ஏற்பாட்டினாலும் சீக்கிய மக்களுக்கு எந்தவித நற்பயனும் விளையாது.

இவ்வளவும் கூறியுள்ள தாரா சிங், சிரோமணி அகாலி தளத்தின் எதிர்கால செயல்முறை பற்றியும் கூறியுள்ளார்.

"அகாலிதளம், எப்பொழுதும் அரசியலைக் கைவிட்டது கிடையாது. தனக்கு அவசியம் என்று ஏற்படுகின்ற பொழுது அரசியலை தனது நடவடிக்கைகளில் சேர்த்துக் கொள்ளும் உரிமை, அகாலி தளத்திடமே எப்பொழுதும் இருந்துவருகிறது."

ஒரிசாவில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சி?

'ஏற்பட அனுமதிக்க மாட்டோம்' என்கின்றனர் பி. சோ.-க்கள்

கட்டாக், மார்ச் 24—

"ஒரிசா மாநிலத்தில், காங்கிரஸ் மீண்டும் பதவிக்கு வருவதற்காக மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளையும் பி. சோ. கட்சி எதிர்க்கும்"

என்று, அக்கட்சியின் ஒரிசா மாநில செயற்குழு தெரிவித்திருக்கிறது.

"அதே நேரத்தில், ஒரிசா மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுவதற்கும் நாங்கள் ஒருப்படமாட்டோம்"

என்றும், பி. சோ. கட்சி கூறியுள்ளது.

"காங்கிரஸ் ஆட்சி தேவையில்லை என்பதை மக்கள், தங்கள் தீர்ப்புமூலம் தெளிவாக்கி விட்டார்கள்; எனவே சர்க்கார் இப்போதைக்கு எதிர்க் கட்சியினரைக் கலக்காமல் எதுவும் செய்யக் கூடாது. காங்கிரசல்லாதாரின் மந்திரி சபை அமைப்பதை நாங்கள் வரவேற்கிறோம்"

என்றும் அக்கட்சி விடுத்துள்ள அறிக்கை கூறுகிறது.

கேரளத்தில் மந்திரி சபை!

நம்பூதிரிபாட் முதல்வராக தேர்வு

எர்ணகுளம், மார்ச் 25—

கேரள சட்டசபை கம்யூனிஸ்டு கட்சியின் தலைவராக இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

மாநிலத்தில் அமையவிருக்கும் முதல் கம்யூனிஸ்டு சர்க்காரின் தலைவர் தேர்தல் உடனடியாகக் கவர்னருக்கு அறிவிக்கப்பட்டு விட்டது.

கம்யூனிஸ்டு மந்திரிசபைக்கு ஆதரவு தருவதாக உறுதிகூறியுள்ள ஐந்து சுயேச்சைகளும், தலைவர் தேர்தல் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

கட்சியின் மாநிலம் பொதுச் செயலாளரான அச்சுதமேனன் உதவித் தலைவராகவும், கோபால மேனன் செயலாளராகவுல் டி.சி. நாராயணன் நம்பியார் கட்சியின் பிரதம கொறடாவாகவும், மாதவன்பிள்ளை, ஈ. பி. கோபாலன் இருவரும் துணைக் 'கொறடா'க்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

லட்சுமணபுரி, மார்ச் 25—

உத்திரபிரதேசத்தின் 1957—58-ம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 9,68,00,000 துண்டு விழுகிறதாம்.

முதலாளிகளின் நியாயமான நலன்களுக்குப் பாதுகாப்பு தருவோம்

கேரளத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு முதலாளிகளின் ஒத்துழைப்பையும் கோருகிறோம்

எர்ணகுளம் பொதுக்கூட்டத்தில் அஜாய் கோஷ் நிலை விளக்கம்

"நாங்கள் அற்புதங்களைச் செய்யப்போவதாக உறுதிமொழி தருவதற்கில்லை என்பதை மக்கள் உணர வேண்டுகிறேன்; ஏனெனில், எங்களை எதிர்நோக்கியுள்ள வேலைகள் மிகக் கடினமானவையாகும். எனவே, அந்தந்த வேலைகளைச் செய்துமுடிக்க ஒவ்வொருவரின் ஒத்துழைப்பையும் நாங்கள் வேண்டி நிற்கிறோம்.

"நாங்கள்இந்த மாநிலத்தில் உள்ள முதலாளிகள் உள்ளிட்ட அனைவரின் ஒத்துழைப்பையும் நாடி நிற்கிறோம்; ஏனெனில், கேரளத்தின் பொருளாதாரத்தைத் 'திருத்திக் கட்டும்' வேலைக்குத் தொழிலாளர்களுடையவும், முதலாளிகளுடையவும் ஒத்துழைப்புத் தேவை என்பதை நாங்கள் அறிவோம்.

"தொழிலாளருக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என விரும்பும் நாங்கள், அதே நேரத்தில், முதலாளிகளின் நியாயமான நலன்களைப் பாதுகாக்கவும் தவறமாட்டோம்,"

என்று, கம்யூனிஸ்டுக் கட்சியின் அகில இந்தியச் செயலாளர் அஜாய் குமார் கோஷ், எர்ணகுளம் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

கூட்டத்தில், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கம்யூனிஸ்டுக் கட்சியின் சட்டசபை மக்கள்சபை உறுப்பினர்கள் அறிமுகம் செய்யப்பட்டனர்.

தோழர்கள் நம்பூதிரிபாட், மற்றும், ஏ. கே. கோபாலன் முதலியோரும் பேசியிருக்கின்றனர்.

நடிப்பு-இசைப் புலவரை அண்ணா நேரில் கண்டார்

சென்னை, மார்ச் 26—

திரைப்பட சம்பந்தமாக ஐதராபாத் செல்லும்போது, ஓங்கோல் அருகில் கார் விபத்துக்குள்ளான நடிப்பிசைப்புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் 22—3—57 அன்று சென்னை வந்து சேர்ந்தார் என்ற செய்தி காஞ்சீபுரத்தில் அண்ணா அவர்களுக்கு 'தொலைபேசி' மூலம் அறிவிக்கப்பட்டதும், அண்ணா அவர்கள் 23—3—57 அன்றே காஞ்சியிலிருந்து புறப்பட்டு சென்னை வந்து, நடிப்பிசைப் புலவரை அடையாறில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்தார்.

நடிப்பிசைப் புலவர், அண்ணா அவர்களைக் கண்டதும், படுக்கையில் இருந்துகொண்டே முகமலர்ச்சியுடன் வரவேற்று எதிரில் அமரும்படி வேண்டிக் கொண்டார்.

பின்னர், கே. ஆர். ஆர். அவர்கள், அண்ணா அவர்களுக்கு விபத்தைப் பற்றியும் டாக்டர்கள் கூறியுள்ள ஆலோசனையையும் விளக்கினார்.

பிறகு, அண்ணா அவர்கள், நடிப்பிசைப் புலவர் எடுத்துக் கொண்ட 'எக்ஸ்ரே' படத்தையும் பார்வையிட்டார்.

பிறகு இருவரும் பொது விஷயங்களைப் பற்றியும் உரையாடினர்.

(4-ம் பக்கம் பார்க்க)

'இணைப்பு முடிவை எவராலும் மாற்ற முடியாது'

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு புதுவை சட்ட மன்றம் தரும் சூடு!

புதுவை, மார்ச் 23—

"இந்திய யூனியனிலேயே இருக்க நாங்கள் செய்த முடிவை யாராலும் மாற்ற முடியாது என நாங்கள் மீண்டும் உறுதியுடன் அறிவிக்கிறோம். சட்டப்படியான அதிகார மாற்றத்தை உடனடியாக உறுதி செய்து, பிரான்ஸ்—இந்திய மக்களிடையேயுள்ள நல்லுறவை பாதுகாக்க வேண்டியது பிரெஞ்சு அரசியலாரின் கடமையாகும்"

என்று, பழைய பிரெஞ்சிந்தியப் பகுதிகளை இந்திய யூனியனுடன் சட்டப்படி இணைப்பது பற்றி சமீபத்தில் பிரெஞ்சு யூனியன் சட்ட மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை மறுத்து, புதுவை சட்ட மன்றம் தீர்மானமொன்று நிறைவேற்றியிருக்கிறது.

மேலும், '1954-ல் கையெழுத்தான இந்தியா—பிரான்ஸ் ஒப்பந்தத்தை இப்போது திருத்தி வரையவேண்டுமென பிரெஞ்சு யூனியன் சட்ட மன்றம் கோருவதில் பொருளில்லை,' என்றும் அத்தீர்மானம் கூறுகிறது.

இத்தீர்மானத்தைப் பற்றி புதுவை சட்ட மன்ற எதிர்க் கட்சித் தலைவர் தோழர் சுப்பையா, தீர்மானத்திலுள்ள உணர்ச்சிகளை தாங்கள் ஆதரிப்பதாகவும், ஆனால் அதிலுள்ள சொற்றொடர்களை மாற்றவேண்டுமென்றும் கூறினார்.

சர்க்கார் சட்சித் தலைவர் தோழர் குபேர் அதை மறுத்துப் பேசவே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளியேறினர். பின்னர் மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நம் நாடு

தி.மு.க.வின் இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 26—3—57 செவ்வாய்

அவர் வாதப்படி!

நமது திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடைத்த வாக்குகள், காங்கிரசுக் கட்சிக்கு எதிர்ப்பான வாக்குகளே அல்லாது, கழகக் கோட்பாடுகளுக்கு உடன்பாடுடைய வாக்குகள் அல்ல என முதலமைச்சர் காமராசர் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு அவர், கழகத்திற்குக் கிடைத்துள்ள வாக்குகள் குறித்து மதிப்பிட்டுக்கூறி இருப்பதை வாதத்திற்காக உண்மையானது என்றே வைத்துக்கொள்ளுவோம்.

அவர் வாதப்படி, காங்கிரசு நீங்கலாக, கழகம் உள்ளிட்ட மற்ற அபேட்சகர்கள் அனைவருக்கும் அளிக்கப்பட்டுள்ள வாக்குகள் அனைத்தும் காங்கிரசு கட்சிக்கு எதிர்ப்பாக அளிக்கப்பட்ட வாக்குகளேயாகும் என்றுதான் கொள்ளவேண்டும். அவ்வாறு கொள்வதுதான் அவர் வாதப்படி நூற்றுக்கு நூறு நியாயமானதாகும்.

கழகத்திற்குக் கிடைத்துள்ள வாக்குகள் குறித்து முதலமைச்சர் சுட்டிக் காட்டியுள்ள நியாயத்தை, காங்கிரசும் கழகமும் நீங்கலாக மற்றவர்கள் பெற்ற வாக்குகள் விவகாரத்திலும் செலுத்திப் பார்ப்பதை முறைபற்றது என முதலமைச்சர் கருதமாட்டார் எனவும் நம்பலாம். ஒத்த ஒரே விவகாரத்தில் உள்ளடங்கியுள்ள ஒன்றுக்கு ஒருவகை நியாயம், மற்றொன்றுக்கு வேறு ஒரு முறையான நியாயம் என்பதை எவரும் ஒப்ப மறுப்பர் என்ற உண்மை முதலமைச்சர் அறியாததல்ல.

அவர் உருவாக்கிய விவாதப்படி, தமிழ் மக்களில் சிலர் காங்கிரசுக் கட்சியை வெறுப்பவர்கள் எண்ணிக்கை எவ்வளவு? விரும்புகிறவர்கள் எண்ணிக்கை எவ்வளவு? என்பதை ஆராய்வோம். அந்த ஆராய்ச்சிக்கு, இந்தத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி பெற்றுள்ள வாக்குகளையும், மற்ற எதிர்க்கட்சிகளும் தனி நபர்களும் பெற்றுள்ள வாக்குகளையுமே தக்கக் கருவியாகக்கொள்ளுவோம்.

முன்னேற்றக் கழகத்தைப் போன்று மாசு துளியும் அற்ற நேர்மையான முறையில் காங்கிரசு, மக்கள் வாக்குகளைப் பெற்று வெற்றி பெறவில்லை என்ற உண்மையை தமிழக மக்கள் தெரிந்திருப்பது போன்றே முதலமைச்சரும் தெளிவாகத் தெரிந்திருக்கிறார். தேர்தல் காலத்தில் மற்றக் கட்சிகளும் தனி நபர்களும் மேற்கொண்ட நேர்மை அளவுகூட, காங்கிரசுக் கட்சி நேர்மையைக் கடைப்பிடிக்கவில்லை என்ற தகவலும் முதலமைச்சர் அறியாததல்ல.

உலகத்தில் உள்ள தவறான முறைகளை எல்லாம் தேடித் தேடி அறிந்து, அவை அனைத்தையும் மிகமிகத் திறமையாக, தம் வெற்றிக்காகக் காங்கிரசுக் கட்சி பயன்படுத்தியும்கூட, தேர்தலில் மொத்தம் பதிவாகியுள்ள வாக்குகளில் 53 இலட்சம் வாக்குகளை மட்டுமேதான் காங்கிரசுக் கட்சியால் பெற முடிந்துள்ளது.

ஆனால் காங்கிரசை எதிர்த்துத் தேர்தலில் போட்டியிட்ட கழகத்திற்கு மட்டும் 16 இலட்சத்திற்குமேல் வாக்குகள் கிடைத்திருக்கின்றன.

கழகமும், மாற்றுக் கட்சிகளும், தனி நபர்களுமாகச் சேர்ந்து மொத்தத்தில் 67 இலட்சம் வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

அதிக்கிரம வழியில் நடந்துகொண்டுங்கூட காங்கிரசுக்கட்சி பெற்றுள்ள வாக்குகள் 53 இலட்சந்தான்.

ஆனால் காங்கிரசுக் கட்சியை எதிர்த்தவர்கள் அனைவரும் பெற்றுள்ள வாக்குகளோ 67 இலட்சம்.

53 இலட்சம் வாக்குகளைக் காங்கிரசுப் பெற்றிருக்கிறது—67 இலட்சம் வாக்குகளை காங்கிரசு எதிர்ப்பாளர்கள் பெற்றுள்ளனர்.

இவ்வாக்குப்பதிவு போதிக்கும் பாடம் என்ன?

தமிழகத்தில் காங்கிரசுக் கட்சியை ஆதரிக்கின்றவர்கள் 53 இலட்சம் பேர்கள்தான் இருக்கின்றனர்.

ஆனால் காங்கிரசுக் கட்சியை எதிர்க்கின்றவர்கள் 67 இலட்சம் பேர்கள் இருக்கின்றனர்.

முதலமைச்சர் காமராசர் வாதப்படி, தேர்தல் தந்துள்ள தீர்ப்பு முடிவு இதுதான்.

அவரே காட்டியுள்ள நியாயப்படி, அவர் செயல்படவிரும்புவதானால், அவர் கட்சி பதவி பெற்க இருப்பதைத் தடுக்க அவரே முன்வர வேண்டும். அவ்வாறு பதவியைத் துறக்க அவர் விரும்பவில்லையானாலும், தம் கட்சியை ஆதரிக்கின்றவர் எண்ணிக்கையைவிட, எதிர்க்கின்றவர் எண்ணிக்கை 14 இலட்சம் மிகுதியாக இருக்கிறது என்ற உண்மையையாவது ஏற்க அவர் முன்வர வேண்டும்.

சனநாயக முறையை செயல்படுத்தும் அமைப்பு விதிகளில், மேற்குறிப்பிட்டுள்ள நியாயத்தைச் செயலாற்ற அல்லது செயலாற்றும்படி வற்புறுத்த இடம் கிடையாது எனக் கூறப்படுமானாலும், சனநாயக உணர்வுக்கு முரணாகத்தான் காங்கிரசுக் கட்சிப் பதவி பெற்றிருக்கிறது என்றப் பேருண்மையை, நல்லறிவாளர்கள் அனைவரும் கண்டிப்பாக ஏற்றேயாகவேண்டும்.

அளவுக்கதிகமான எண்ணிக்கை உறுப்பினர்களைப் பெற்று ஆளும் உரிமையை காங்கிரசுக் கட்சி பெற்றிருந்த போதிலும்கூட, எதிர்க்கட்சிகள் கூட்டாகப் பெற்றிருப்பதைவிட 14 இலட்சம் குறைந்த அளவு வாக்குகளை மட்டுமே பெற்று, அவ்வாளும் உரிமையை காங்கிரசுக் கட்சி பெற்றுள்ள காரணத்தால், காங்கிரசு ஆட்சியை சிறுபான்மையினரால் நடத்தப்பட இருக்கும் ஆட்சி என்றுதான், சனநாயக உணர்வுப்படி கூறவேண்டும் — கொள்ள வேண்டும். அதைத்தான் மக்களாட்சித் தத்துவம் நமக்கு உணர்த்துகிறது.

குறைந்தபட்ச மக்களின் ஆதரவை மட்டுமே முறைகேற்ற முறையில் பெற்று தேர்தலில் வெற்றி பெற்றுள்ள காங்கிரசுக் கட்சி கோலோச்சப் போகிறது தமிழகத்தில்!

முதலமைச்சர் காமராசர் விவாதப்படி, அமைய இருக்கும் காங்கிரசு ஆட்சியை சிறுபான்மையினர் ஆட்சி என்றுதான் சொல்லவேண்டும்!

டில்லிப் பெரியவர்களின் ஊழல் மிகுந்த நிர்வாகம்!

வரிப் பணம் பாழடிக்கப்படும் புதிய வகைகள்!

ரூ. 14 இலட்சம் மதிப்புடைய நிறுவனத்திற்கு ரூ. 44 இலட்சம் கடன்!

மேலும் கடன் தர மந்திரி சிபாரிசு!

மக்கள்சபையில் நிதிமந்திரி விளக்கம்

டில்லிப் பெரியவர்களின் நிர்வாகத்தால், மக்கள் வரிப் பணம் பாழடிக்கப்படும் மற்றொரு விதம் குறித்து, நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி மக்கள்சபையில் தந்துள்ள தகவல் ஒன்று விவரிக்கிறது.

சிபாரிசு

டில்லி சர்க்கார் இலாகா (பெயர் குறிப்பிட மந்திரி மறுத்துவிட்டார்)வின் மந்திரி ஒரு நிறுவனத்திற்கு ரூ. 20 இலட்சம் கடன் தருமாறு சிபாரிசு செய்திருக்கிறாராம்.

முன்பே

ஆனால், அந்த இலாகாவின் தஸ்தாவேஜுகளைப் புரட்டிய போது, ஏற்கனவே அந்த நிறுவனம் டில்லி சர்க்காரிடமிருந்து ரூ. 44 இலட்சம் கடன் வாங்கியிருக்கிறது என்பது தெரியவந்ததாம்.

ரூ. 30 இலட்சம் பாழ்!

வாங்கிய ரூ. 44 இலட்சத்தில் ரூ. 30 இலட்சத்தை அந்த நிறுவனம் பாழடித்துவிட்டதோடு, கடனையும் திருப்பித் தரவில்லையாம்.

மதிப்பு!

அந்த நிறுவனத்தின் சொத்து மதிப்பு ரூ. 14 இலட்சம் மட்டுமேதானாம்!

இதற்குத்தான்

இந்த இலட்சணத்தில் உள்ள நிறுவனத்திற்குத்தான் மேலும் ரூ. 20 இலட்சம் கடன் தருமாறு நிதி இலாகாவிற்கு மந்திரி ஒருவர் சிபாரிசு செய்திருக்கிறாராம்.

இவற்றைக் கூறியிருக்கும் டி. டி. கிருஷ்ண மாச்சாரியார் மேலும் சில கூறியிருக்கிறார்:

பட்டை நாமம்!

மத்திய சர்க்கார் சில வகைகளுக்குக் கொடுக்கும் கடன் திருப்பித்தரப்படுவதில்லை!

அரிய சோதனை!

எனவே, தரப்படும் தொகையை கடன் என்று கருதாமல் மானியம் என்றே கருதலாம் என்றும் மக்கள் சபையில் துணிவோடு கூறினாராம் டி. டி. கிருஷ்ணமாச்சாரி!

ஆசிய நாடுகளுக்கு யோகம்

நிபந்தனையின்றி ரஷ்யா உதவ முன்வருகிறது

ஆசிய நாடுகளுக்கு மேலும் அதிகமான உதவியளிக்க இரஷ்யா முன்வந்துள்ளது. நிபந்தனைகள் விதிக்கப்படாமல் இந்த உதவிகள் அளிக்கப்படுமாம். அதை இரஷ்யப் பிரதிநிதி மேல்டன் தெரிவித்துள்ளார்.

புதிய மந்திரி சபைகள்

தமிழகத்தில்

தமிழகத்தில், பெரும்பான்மையான இடங்களைப் பெற்றுள்ள காங்கிரசார் வரும் ஏப்ரல் இரண்டாந் தேதியன்று, ராஜாஜி மண்டபத்தில் கூடி தங்கள் தலைவரைத் தேர்ந்தெடுப்பர் என்று டெல்லியிலிருந்து திரும்பியுள்ள பக்தவத்சலம் கூறியுள்ளார்.

கன்னடத்தில்

கன்னட மாநிலமான மைசூரில் கட்சித் தலைவர் தேர்தல், ஏப்ரல் 4-ந்தேதியன்று அல்லது 6-ந்தேதியன்று நடைபெறும் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள காங்கிரஸ் உறுப்பினர்களில் பெருவாரியானவர்களின் ஆதரவைப் பெற்றுள்ள நிஜலிங்கப்பாவே, கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் கூறப்படுகிறது.

★

கேரளத்தில்

கேரளத்தில் கம்யூனிஸ்டுகள், வரும் ஏப்ரல் 5-ந் தேதியன்று மந்திரி சபை அமைப்பர் என்று தெரியவருகிறது.

கேரள கவர்னர், டாக்டர் ராமகிருஷ்ணராவ், புதுடில்லியில் டாக்டர் ராசேந்திரபிரசாத், பண்டித நேரு, பண்டித பந்த் ஆகியோரைச் சந்தித்து கேரளத்தில் கம்யூனிஸ்டுகளை ஆட்சியிலமர்த்துவது பற்றிப் பேசினார் என்றும், அவர் கேரளத்தில் இதர அரசியல் கட்சியினரையும் கூப்பிட்டு, கம்யூனிஸ்டுகள் ஆட்சி, நிலையானதாயிருக்குமா என்பதையும் கேட்டறிவார் என்றும், தாங்கள் நிலையான சர்க்கார் அமைக்க முடியும் என்பதற்கான உறுதிமொழியை கம்யூனிஸ்டுகளிடமிருந்து கவர்னர் கேட்டுப் பெறுவார் என்றும் கூறப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. க. சட்டசபை-பாராளுமன்ற உறுப்பினர் தனிக் கூட்டம்

★

திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் நின்று வெற்றி பெற்றுள்ள சட்டசபை—பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிக் கூட்டம் ஒன்று 31—3—57 ஞாயிறு காலை 10-மணிக்கு, சென்னை-இராயபுரம் 'அறிவக'த்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெறும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் அனைவரும் வருகைதர வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தமிழர் பிரச்சினையைத் தீர்க்கப் பண்டிதருக்கு நேரமில்லையாம்!

இலங்கை - இந்தியப் பிரதமர்கள் சந்திப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 25—

இலங்கையில் வாழச் சென்ற இந்தியர் பெருவாரியாகத் தென்னாட்டைச் சேர்ந்த தமிழர்கள். இன்றைய இலங்கை அரசாங்கம் அவர்களுக்கு செய்திடும் தீங்குகள்—தந்திடும் தொல்லைகள் ஏராளம்; இந்த முக்கியப் பிரச்சினையைத் தீர்க்க பச்சைத் தமிழர் காமராசரோ, பண்டித நேருவோ தீவிரமாக ஈடுபடவில்லை. முன்பு டில்லியில் இலங்கைப் பிரதமர் பண்டாவுக்கு அளித்த விருந்தின்போதுகூட இதைப் பற்றிப் பேசவில்லை.

வரும் ஜுன் திங்களில் இரு பிரதமர்களும் கூடி சுமுகமாக ஒரு நல்ல முடிவுகாண ஏற்பாடாகியது.

ஆனால், ஜுன் மாதத்தில் பண்டித நேருவின் கண்ணோட்டம் வேறு திசையில் சென்றுள்ளது. சொன்னபடி நடக்கவோ, தமிழர் நலனில் அக்கரைகாட்டவோ அவருக்கு நேரமில்லை. எனவே இலங்கை - இந்தியப் பிரதமர்களின் சந்திப்பு ஒப்புக்கொண்டபடி நடைபெறாது என்று உறுதியாகத் தெரிந்துவிட்டது. எப்போதுதான் பண்டித நேரு கடமையைச் செய்வார் என்பதும் தெரியவில்லை!

25 சதவிகித வெட்டு

திருச்சி, மார்ச் 25—

ஏப்ரல் முதல் தேதியிலிருந்து இங்கு 25 சதவிகித மின்சார விநியோக 'வெட்டு' ஏற்படும் என்று தெரியவருகிறது.

அண்ணு மற்றும் கழகத்தவர் பெற்ற வெற்றி

வெளிநாட்டுத் தமிழர்க்குத் தரும் எல்லையற்ற மகிழ்ச்சி

தங்கள் கனவு நனவாவதாக விழாக் கொண்டாடுகின்றனர்

தமிழகத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ற தி. மு. கழக வீரர்களைப் பாராட்டியும், மகிழ்ச்சி தெரிவித்தும், வெளி நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் பல்வேறு முறைகளில் செய்தியனுப்பி யுள்ளனர்.

மலேயா :

அண்ணு அவர்களும் மற்ற கழக வீரர்களும் வெற்றியடைந்த செய்தியறிந்து உள்ளம் பூரித்து தாங்கள் நெடுநாட்களாக கண்ட கனவு நனவாகிவிட்டதாக வாழ்த்தியும், தமிழகத்தில் தங்களின் பிரதிநிதிகள் சட்டமன்றத்தில் அமர்வது வெளிநாட்டில் வாழும் தமிழ் பெருமக்களுக்கு புத்துணர்ச்சியும் — நல்வலிவும் கொடுப்பதாகுமென்று பாராட்டி கடிதங்கள்—தந்திகள் மூலம் செய்தி அனுப்பியுள்ளனர்.

சிங்கப்பூர் :

கழகத் தலைவர்களின் வெற்றி தமிழர்களின் வெற்றி—தமிழின் வெற்றி—திராவிடத்தின் வெற்றி என்று பாராட்டிச் செய்தியனுப்பி மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர் சிங்கப்பூரில் வாழும் தமிழகத்து மக்கள்.

பர்மா :

பர்மாவில் வாழும் தமிழ் மக்கள் அண்ணுவும் மற்றத் தோழர்களும் வெற்றிபெற்றச் செய்தியறிந்து தங்களின் எல்லையற்ற மகிழ்ச்சியை வெற்றி விழாவாகக் கொண்டாடித் தெரிவித்துள்ளனர்.

இலங்கை :

இலங்கையில் வாழும் கழகத் தோழர்களும்—தமிழ் மக்களும் அண்ணு அவர்களும், மற்ற முன்னணி வீரர்களும் வெற்றி பெற்றதை அறிந்து, அங்கு இனிப்பு வழங்கியும்—பாராட்டுக் கூட்டங்கள் நடத்தியும், வாழ்த்துத் தந்திகள் அனுப்பியும், பாராட்டுக் கடிதங்கள் வரைந்தனுப்பியும் வெற்றி விழா கொண்டாடி இருக்கின்றனர்.

மதுரை :

8—3—57 அன்று, அண்ணு அவர்களின் வெற்றிச் செய்தி கேட்ட மதுரை டவுன்ஹால் ரோடு, 'அறிவுப் பூங்கா'வைச் சார்ந்த தோழர்கள், பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கியும் வெடிகள் முழக்கியும் பாராட்டு தெரிவித்துக்கொண்டார்கள்.

செயங்கொண்டம் :

8—3—57-ல், அண்ணு வெற்றி செய்தியறிந்த கழகத் தோழர்கள், பொதுமக்களுக்கு மிட்டாய்-சர்க்கரை வழங்கி பாராட்டு தெரிவித்துள்ளார்கள்.

மற்றும், தோழர்கள் சம்பத், அன்பழகன், கருணாநிதி, ஆசைத்தம்பி, சத்தியவாணிமுத்து ஆகியோர்களின் வெற்றி பெற்ற தினத்திலும் தோழர்கள் பாராட்டு விழா நடத்தினர்.

காட்டுமன்னார்குடி :

அண்ணு அவர்கள் வெற்றி பெற்றதைப் பாராட்டி 7-3-57 இரவு 7-30 மணிக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கி பாராட்டு விழா கொண்டாடினர்.

சேதுபாவாசத்திரம் :

21—3—57 மாலை 5 மணிக்கு, சேதுபாவா சத்திரம் தி.மு. கழகச் சார்பில், தோழர் எஸ். துரை மாணிக்கம் தலைமையில் ஓர் மாபெரும் ஊர்வலமும், மாலை 6 மணியளவில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர் எம். எஸ். சேக் இஸ்மாயில் அவர்களும் மற்றும் பல தோழர்களும் சொற்பொழிவாற்றினர். சிறுர்களுக்கு இனிப்பும் வழங்கப்பட்டது.

தென்திருப்பேரை :

8—3—57-ல், அண்ணு அவர்கள் வெற்றியைப் பாராட்டி, தி. மு. கழகச் சார்பில் ஊர்வலம் நடத்தியும் தோழர் சி. கே. சி. பாண்டியனுல் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கியும் வெற்றி விழா கொண்டாடப்பட்டது.

தலைநகரில் பாராட்டுக் கூட்டம்

அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் நின்று வெற்றி பெற்றுள்ள அண்ணு அவர்களுக்கும், மற்ற எல்லாத் தோழர்களுக்கும் **31-3-57 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு** திருவல்லிக்கேணி கடற்கரையில் பாராட்டுக் கூட்டம் நடைபெறும்.

பொதுச்செயலாளர் இரா. **நெடுஞ்செழியன்** அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.

கேரளத்தில் கம்யூனிஸ்டுகள் ஆட்சி!

மலேயாவாழ் மலையாளிகளின் பீதி

மலேயாவில் வாழும் சுமார் 50 ஆயிரம் மலையாளிகளும், கேரளத்தில் கம்யூனிஸ்டு சர்க்கார் ஏற்பாடுவதை பீதியுடன் எதிர்நோக்குகின்றனர், என்று கோலாலம்பூர் செய்தி ஒன்று கூறுகிறது.

அவர்கள் தாய் நாடு சென்று திரும்பவேண்டுமென விரும்பினுல், மலாயா சர்க்கார், பிரயாணக் கட்டுப்பாடுகளைத் தீவிரப் படுத்துமோ என்று அவர்கள் கவலைப்படுகின்றனராம்.

என்ருலும், இந்த பீதி அனுவசியமானது என்று, மலையாளிகள் சங்கத் தலைவர் என். இராகவன் கூறியுள்ளாராம்.

நன்றி அறிவிப்பு

சென்னை சட்ட சபைத் தேர்தலில், அரியலூர் தொகுதியில் தி. மு. கழக அபேட்சகராகப் போட்டியிட்ட என்னை ஆதரித்து, பெருவாரியாக வாக்களித்தப் பொது மக்கள் அனைவரும் கழகத்தின் கொள்கையை உணர்ந்தும், நோக்கத்தை அறிந்தும் அளித்த வாக்குகள் என்பதைக்காண பெருமகிழ்ச்சியடைகிறேன்.

குறைந்த வாக்குகளில் தேர்தல் முடிவு பாதகமானது கண்டு துக்கத்தில் ஆழ்ந்துள்ள அன்பர்கள் — உணர்ச்சிவயப்பட்டு ஆத்திரம் தாங்காது சஞ்சலப் பட்ட ஆதரவாளர்கள்—மற்றும் நமது கழகத் தோழர்கள் அனைவரும் அமைதியும்—ஆறுதலும் பெறவேண்டுகிறேன்.

இத்தேர்தலின் முடிவு, எதிர்கால வெற்றிப்பணிக்கு பொது மக்களைத் தட்டியெழுப்பி இருக்கும் பெரும்பயனை கழகம் பெற்றிருக்கிறது.

இந்த வெற்றிதான் கழகத்தின் முதல் குறிக்கோள். அதைக் கழகம் இத்தேர்தலில் அடைந்து விட்டது. இந்த வெற்றியைத் தந்த வாக்காளர் பொது மக்களுக்கும், ஆர்வத்தோடு பணியாற்றிய கழகத் தோழர்களுக்கும், மற்றும் என் மீது அன்பு கொண்டுள்ள ஆதரவாளர்களுக்கும் எனது அன்பான வணக்கத்தையும்—நன்றியையும் தெரிவித்துக் கொண்டு, தேர்தலில் நான் தோல்வி கண்டிருந்தாலும், தொடர்ந்து மக்களிடம் பணியாற்றி வருவேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்

இரா. நாராயணன்

★

சென்னை சட்டசபைத் தேர்தலில் நிலக்கோட்டை இரட்டை உறுப்பினர் தொகுதியில் (பொது) தி. மு. க. அபேட்சகளுகப் போட்டியிட்ட என்னை ஆதரித்து நல்லமுறையில் இரவு பகல் என்று பாராமல் பணியாற்றிய கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் தோல்வியடைந்தாலும், என்றும் மக்களின் தொண்டனுகப் பணி புரிவேன் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,

தா. ஆவுடையப்பன்

★

6—3—57-ல் நடைபெற்ற முசிரி தொகுதி சட்டசபைத் தேர்தலில் தி. மு. கழக அபேட்சகர்களாகிய எங்களுக்கு வாக்களித்த பொதுமக்களுக்கும், ஆர்வத்துடன், இரவு பகல் என்று பாராது பாடுபட்ட தோழர்களுக்கும் எங்கள் உளம்கனிந்த நன்றியையும்—வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பணம்—பதவி — சாதி செல்வாக்குகளுக்குப் பணியாமல் எங்களுக்குப் பெருமளவில் வாக்களித்தமைக்காண மகிழ்ச்சியும் ஆர்வமும் கொள்கிறோம். பொதுப்பணிக்கு மேலும் பாடுபட ஊக்குவித்த பொதுமக்கள் அனைவருக்கும் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்புள்ள

மு. பெ. முத்துக்கருப்பன்,

ஏ. துரைராஜ்

வெற்றிபெற்ற கழக வீரர்களுக்குப் பொதுச்செயலாளர் பாராட்டு

கள்ளக்குறிச்சித் தொகுதியில் வெற்றிபெற்ற கழகத் தோழர்கள் சி. நடராசன், எம். ஆனந்தன் ஆகியோரைப் பாராட்ட, 21-3-57-ல் தியாகதுருகம் கே. வி. கே.சாமி அரங்கில், தோழர் வி. டி. இளையாப்பிள்ளை அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

சென்னையிலிருந்து — சேலம் சென்றுகொண்டிருந்த பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், சேலம் அ. சித்தையன் அவர்களும் பாராட்டு விழாவில் கலந்து கொண்டார்கள். தோழர் அ. சித்தையன் அவர்கள் வெற்றியடைந்த தோழர்களைப் பாராட்டிப்பேசினுர். பொதுச்செயலாளர் அவர்கள் வெற்றிபெற்றத் தோழர்களைப் பாராட்டியும், வாக்களித்த பொது மக்களுக்கு நன்றிகூறியும் சொற்பொழிவு நிகழ்த்தினுர்.

பொதுச்செயலாளர் அவர்களுக்குப் பல நிறுவனங்கள் மலர் மாலைகளும் கைத்தறித் துணிகளும் அணிவித்தன. வெற்றி பெற்றத் தோழர்கள் பாராட்டுதலுக்கு நன்றியையும்வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, தங்கள் தொண்டு சிறக்க பொது மக்களின் ஒத்துழைப்பு வேண்டினுர்.

பாராட்டு விழாவில் பொது மக்களுக்கு இனிப்பும்—தாம்பூலமும் வழங்கப்பட்டது. ஊர்வலமும் நடைபெற்றது.

கழகச் செய்திகள்

சிங்கப்பூர் தி. மு. கழக ஆண்டுவிழா

17—3—57 மாலை 4-மணிக்கு கழகத்தின் 4-ம் ஆண்டுவிழா தமிழர் சீர்திருத்த சங்கம் (125, சிராங்கூன் ரோடு) இல்லில் செயலாளர் தோழர் எஸ். சிங்காரவேல் தலைமையில் நடைபெற்றது. கூட்டத் துவக்கத்தில் தோழர் முருகானந்தம், எம். ஏ. காசிம் ஆகியோர் இன்னிசை வழங்கினர். தோழர் நாகராசன், விழாவில் கலந்துகொண்ட அனைவரையும் வரவேற்ருர். துணைச்செயலாளர்: பொ. சோமசுந்தரம்; பொருளாளர் : வி. இருளப்பன் ஆகியோர் பேசினர்.

பின்னர், தோழர் ஆர். முருகானந்தம் தலைமையில் கீழ்க்கண்டத் தோழர்கள் பொதுக்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் எஸ். சிங்காரவேலன், பொ. சோமசுந்தரம், இரெ. தருமு, கெ. ஏ. நாகராசன், எஸ். இராசு, வி. இருளப்பன், ஆர். முருகானந்தம், கெ. எம். சாலி, ஆர். வீரப்பன், வி. சுப்பையா, சின்னதம்பி, பி. இராசகோபாலன், ப. பெ. முத்து, மா. க. மதியழகன், அ. சோமு, மு. க. இராமையா, ஆர். தங்கமணி, எல். வீரப்பன், ச. பார்த்தசாரதி, என். குமாரசாமி, சங்கரன், பொ. மணியம், திருமதி மணியம், பெருமாள்.

பொதுக்குழுவால் செயலாளராக தோழர் எஸ். சிங்காரவேல்; துணைசெயலாளர்களாக தோழர்கள் பொ. சோமசுந்தரம், ஆர். முருகானந்தம், பொருளாளராக தோழர் வி. இருளப்பன் ; செயற்குழுவினராக தோழர்கள் எஸ். வீரப்பன், மா. க. பதியழகன், ஆர். வீரப்பன், எஸ். இராசு, இரெ. தருமு, கெ. ஏ. நாகராசன், கே. எம். சாலி, அ. சோமு, மு. க. இராமய்யா, ஆர். தங்கமணி, பி. இராசகோபாலன் ஆகியோரும், கணக்காயராகத் தோழர் மு. கருப்பையாவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தி. மு. க. செல்வம் நாடகக் குழு செயலாளராகதோழர் ஆர். தங்கமணியும், கே. வி. கே சாமி தொண்டர் குழு செயலாளராகத் தோழர் கே. எம். சாலியும் தமிழர் பிரதிநிதித்துவ சபைக்கு தோழர்கள் எஸ். சிங்காரவேல், பொ. சோமசுந்தரம், ஆர். முருகானந்தம், கெ. ஏ. நாகராஜன், கே. எம். சாலி, இரெ. தருமு, எஸ். வீரப்பன் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மழவராயநல்லூர்

6—3—57 மாலை 5 மணிக்கு, மழவராயநல்லூரில் தி. மு. கழகத் திறப்பு விழாக் கூட்டம் தோழர் பொன். சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ். கோவிந்தராசன், ஆ. முருகேசன் ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

புதூர் தி. மு. கழகம்

புதூர் தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் 13-3-57 செவ்வாய்க்கிழமை இரவு, தோழர் கன்னியப்பன் தலைமையில் நடைபெற்றது. கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர் : ச. கடற்கரை; துணைச் செயலாளர்: வீ. பொன்ராசு; பொருளாளர்:ச. இராசகுருசாமி. நிர்வாக உறுப்பினர்கள்: வெ. சங்கரபாண்டியன், சா. கார்ச்பிச்சை, கன்னியப்பன், சீ. வெள்ளச்சாமி, செ. அருணசலம், வெ. வெள்ளச்சாமி, கா. பஞ்சவர்ணம், ஆ. மோசை.

அலங்காநல்லூர் தி.மு.க.

17—3—57ல், அலங்காநல்லூர் தி. மு. கழகத்திற்கு கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: வேணுகோபால்; துணைச் செயலாளர்: பி. பெரியசாமி; பொருளாளர்: எஸ். வி. கோபால்; மாவட்டப் பிரதிநிதி: ஜி. வி. சின்னசாமி.

சேலம்நகர 17வது வட்ட தி. மு. கழக அமைப்புக் கூட்டம்

19—3—57ல் தோழர் டி. என். இராமலிங்கம் தலைமையில் சேலம் நகர 17-வது வட்ட தி.மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எம். சி. கிருஷ்ணன் செயலாளராகவும், பி. கே. ராஜாராம் துணைச்செயலாளராகவும், எம். ஆர். சந்திரய்யன் பொருளாளராகவும், இராசகோபால், கிருஷ்ணன், சுந்தரராமன், ஜெயராமன், சீனிவாசன், சண்முகம், வாசுதேவன், ரெங்காச்சாரி துளசிராமன், இலட்சுமணன், நரசிம்மன், ராமய்யர், ரங்கனுயகலு, துளசிராமன், ஜெயராமன், குப்புசாமி, நாகேந்திரன், கிருஷ்ணன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பாம்பன் தி. மு. கழகத் துவக்க விழா

18—3—57ல் பாம்பன் தி. மு. கழகத் துவக்கு விழா, மஜீது திடலில் தோழர் ஜமால் முகையதீன் தலைமையில் நடைபெற்றது. தோழர் முகவை-யூசுப் இயக்கப் பாடல்கள் பாடினுர். தோழர்கள் இராமேசுவரம் தி. மு. கழகச் செயலாளர் காசிம் முகம்மது, முகவை சீனி, மதுரை மு. வசனப்பித்தன், மாணவி ஓயிட்ராணி ஆகியோர் சொற்பொழிவாற்றியபின், மாணவன் அ. காசிரீன் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

ஆமதாபாத் தி. மு. கழக கிளை செயற்குழு

16—3—57 மாலை 5 மணிக்கு ஆமதாபாத் 1-வது வட்டக் கிளையின் செயற்குழுக் கூட்டம் கழக இல்லத்தில் கூடியது. பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தி. மு. க. கிளைக் கட்டிட திறப்பு விழா

22-3-57 காலை 10 மணிக்கு நமனசமுத்திரம் தி. மு. கழகக் கிளை கட்டிடத் திறப்பு விழா தோழர் அன்புபித்தன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றிய பின், தோழர் ஏ. தேவதாஸ் குழுவினர் இன்னிசை நடைபெற்றது. இறுதியில் தோழர் எஸ். முத்தையா நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

சேலம் பீடித் தொழிலாளர் கூட்டம்

பொதுச்செயலாளர் கலந்து கொண்டார்

11—3—57 இரவு 10 மணியளவில் சேலம் நகரப் பீடித் தொழிலாளர் முன்னேற்ற சங்க அமைப்புக்கூட்டம், நெ. 2. வன்னியகுல க்ஷத்திரியர் தெரு— வன்னியர் வளர்ச்சிக் கழகக் கட்டிடத்தில் நடைபெற்றது.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையில் சங்க அமைப்பின் அவசியத்தையும்—சங்கத்தின் குறிக்கோளையும் விளக்கினார்.

சேலம் நகரிலுள்ள பீடித் தொழிலாளர்களை இச்சங்கத்தில் ஒன்று திரட்ட, தோழர்கள் சிற்றுளி சுப்பிரமணியம், எம்.பி. ரஹீத், ஆர். இஸ்மாயில், டி. எஸ். மகமது மைதீன், பி. அப்துல் ரகிமான், சி. ஏ. திவான், ஏ. ஹகீம் ஆகியோரைக்கொண்ட அமைப்புக்குழு ஏற்படுத்தப்பட்டது. இவ்வமைப்புக்குழுவுக்கு மற்றும் 4-பேர்களை சேர்த்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.

அமைப்புக்குழு செயலாளர்களாக தோழர்கள் சிற்றுளி சுப்பிரமணியம், சி. ஏ. திவான் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

சிங்கப்பூர் சுதந்திரம்

லண்டன், மார்ச் 22—

சிங்கப்பூரில் உள்நாட்டுப் பாதுகாப்பு, அயல்நாட்டு விவகாரங்கள் பற்றி சிங்கப்பூர் அரசாங்கத்திடம் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு திட்டத்தைத் தயாரித்து தந்துள்ளது.

சிங்கப்பூர் பிரதிநிதிகள் கூடி திட்டத்தை ஆராய்ந்து முடிவு தெரிவித்துள்ளனர்.

சிங்கப்பூருக்கு உள்நாட்டு சுய ஆட்சி வழங்கப்பட வேண்டுமென்று பிரதிநிதிகள் கோரியுள்ளனராம்.

பெண்கள் பெட்டி எரிக்கப்படவில்லை?

'ஆதாரமற்ற புகார்' என்கிறர் இரயில்வே அமைச்சர்

புதுடில்லி, மார்ச் 25—

"அரியலூர் இரயில் விபத்தில் சிக்குண்ட பெட்டிகளில், பெண்கள் பெட்டி பெட்ரோல் ஊற்றி எரிக்கப்பட்டதாகக் கூறப்படும் புகார் ஆதாரமற்றது; இப்புகார் பரிசீலனை செய்யப்பட்டு, உண்மையானதல்ல என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது"

என இரயில்வே அமைச்சர், மக்கள் சபையில் கூறியுள்ளார்.

அரியலூர் எதிரொலி

123 நஷ்டஈடு மனுக்கள் இன்னும் விசாரணையில் இருக்கிறதாம்

புதுடில்லி, மார்ச் 25—

'அரியலூர் இரயில் விபத்தில் நஷ்டஈடு கோரிய 258 மனுக்களில் இன்னும் 123 மனுக்கள் விசாரணையில் இருக்கிறது"

என்று மக்கள் சபையில், துணை அமைச்சர் அளகேசன் கூறியுள்ளார்.

நடிப்பு-இசைப்புலவரை..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உடல்நலங்குன்றிய நிலையில்கூட, நடிப்பிசைப் புலவரின் கழகப் பற்றையும் பொதுச்சேவையில் தொண்டாற்றத் துடிக்கும் ஆர்வத்தையும் அவரது உரையாடல் பலப்படுத்துவதாக அமைந்திருந்தது.

இறுதியில், அண்ணா அவர்கள், இராமசாமி அவர்களை முழு ஓய்வு எடுத்துக்கொள்ளுமாறு அறிவுரை கூறி விடைபெற்றுக் கொண்டார்.

நடிப்பிசைப் புலவர் இன்னும் ஒருமாத காலத்திற்குள்ளாகவே குணமடைந்துவிடுவார். அவருக்கு எத்தகைய கவலைக்கிடமான உள்காயமும் இல்லை என்பது, டாக்டர்கள் உறுதிப்படுத்தியதிலிருந்து தெரியவருகிறது.

படத்திறப்பு

★

27—3—57 மாலை 6-15 மணிக்கு, சென்னை ஹாரிஸ்ரோடு எண் 68,கோமளீசுவரன்பேட்டை முன்னேற்ற சங்கத்தில், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு டபிள்யூ. எஸ். கிருஷ்ணசாமி நாயுடு அவர்களின் படத்தை உயர்நீதிமன்ற நீதிபதி பஷீர் அகமது சையீத் அவர்கள் திறந்து வைப்பார்.

59,273 மாணவர்கள்!

எஸ். எஸ். எல். சி. பரீட்சை எழுதுகிறார்கள்

சென்னை, மார்ச் 25—

மார்ச் 20-ந் தேதி ஆரம்பமான இந்த ஆண்டு எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்கு 59,273 மாணவர்கள் ஆஜராகியுள்ளார்கள்; இவர்களில் 4,762 பேர் 'பிரைவேட்' அபேட்சகர்கள்.

சென்னை மாநிலத்தில் உள்ள 905 உயர்தரப் பள்ளிகளிலிருந்து 54,507 மாணவர்கள் பரீட்சை எழுதுகின்றனர். இவர்களுக்கு வசதியாக 412 இடங்களில் பரீட்சை கேந்திரங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வெற்றி விழா

அண்ணா மற்றும் வெற்றி பெற்ற கழகத் தோழர்களைப் பாராட்டி, 27—3—57 காலை 11-மணிக்கு, சென்னை-நேப்பியர் பார்க் ரிட்சி தெருவில், நரசிங்கபுரம் கிராமவாசிகள் சார்பில், தோழர் அ. பொ. அரசு தலைமையில் ஏழைகளுக்குக் கஞ்சி ஊற்றுதலும், சிறுவர்களுக்குத் தின்பண்டங்கள் வழங்குதலும் நடைபெறும். கழகத் தோழர்கள் கலந்து கொள்ளுமாறு கோரப்படுகிறார்கள்.

'காணாத காட்சியைக் காணப் போகிறோம்'

'கலையுலகின் குரல் சட்டசபையில் கம்பீரமாக ஒலிக்கப் போகின்றன'

'நாடகாசிரியர்கள், நாடக நடிகர்கள், திரைப்பட வசனகர்த்தாக்கள் என்ற பெயர்களுக்கு உரியவர்களான மூவருக்கும் சங்கத்தின் நல்வாழ்த்துக்கள்'

'நடிகன் குரல்' அளிக்கும் வரவேற்பும்—வாழ்த்தும்

"இதுவரையில் காணாத காட்சி, கலைஞரையே கண்டறியாத சட்டசபையிலே கலைத் தொடர்புள்ள மூவர் வீற்றிருக்கப்போகின்றனர்.

நாடு விடுதலை பெற்ற நாள் முதல் இன்றுவரை நமது மாநில சட்டசபையிலே கலைஞர்கள் வீற்றிருந்ததில்லை. அரசியல் சட்ட விதிகளின்படி மேல்சபையில் கலைஞர்களுக்குரிய நியமன இடங்களிலேகூடக் கலைஞர்களை இருக்கச் செய்ய வேண்டும் என்று ஆட்சியாளர் கருதவில்லை. அது தவறென்று கண்டனக் குரல்களும் அங்கே எழவில்லை.

காணாத அந்தக் காட்சியைக் காணப்போகிறோம். கலையுலகின் குரல்கள் சட்டசபையிலே கம்பீரமாக ஒலிக்கப்போகின்றன. நாடகாசிரியர்கள், நாடக நடிகர்கள், திரைப்பட வசனகர்த்தாக்கள் என்ற பெயர்களுக்கெல்லாம் உரியவர்களான திருவாளர்கள் சி. என். அண்ணாதுரை, மு. கருணாநிதி, எ. வி. பி. ஆசைத்தம்பி ஆகிய மூவரையும் பெருவாரியான ஓட்டுக்களால் சட்டசபைக்கு மக்கள் தேர்ந்தெடுத்துள்ளனர்.

இவர்கள் ஒரு கட்சி சார்பிலே வெற்றி கண்டு வந்தவர்கள் தாம் என்றாலும், கலைஞர்கள் என்று குறிப்பிடத்தக்கவர்கள்; கலையைப் போற்றுபவர்கள்; கலாசக்தியின் மூலம் மகத்தான காரியங்களைச் சாதிக்க முடியும் என்ற உண்மையை உணர்ந்தவர்கள். எனவேதான், இவர்கள் சட்டசபையிலே இடம் பெற்றமைக்காக நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

தென்னிந்திய நடிகர் சங்கம் எந்தக் கட்சியையும் சார்ந்ததல்ல என்றாலும், நாடக, சினிமாத் துறைகளிலே ஈடுபட்டுள்ள கலைஞர்கள் என்ற முறையில் வெற்றி பெற்ற இம்மூவருக்கும் தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது. புதிய சட்டசபையில் கலையுணர்ச்சி மிக்க ஏனைய உறுப்பினர்களுக்கும் சங்கத்தின் நல்வாழ்த்துகள் உரியன.

கலாச்சாரத் தூதுக்குழுக்கள் சம்பந்தமாகவும், மேல் சபையில் கலைஞர்களுக்குரிய இடங்களைப் பற்றியும் சர்க்காரின் பட்டமளிப்பு, பாராட்டு, பரிசு, இன்னும் இவைபோன்ற பல விஷயங்களிலும் கலையுலகம் வெளியே தரும் குரலுக்கு இம்மூன்று கலைஞர்களும் சட்டசபையிலே குரல் கொடுப்பார்கள் என்று நாம் நம்புகிறோம்.

இவர்கள் குறிப்பிட்ட ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக, கலைசம்பந்தமாக இவர்கள் எழுப்பும் குரலைக் கட்சிக்கண் கொண்டு பார்த்து மற்றக் கட்சிக்காரர்கள் அலட்சியப்படுத்தாமல், இவர்கள் தரும் நல்ல யோசனைகளுக்குச் சபையில் உள்ள எல்லா உறுப்பினர்களும் நல்லுள்ளத்தோடு செவிசாய்த்து ஆவன செய்வார்கள் எனவும் நம்புகிறோம்.

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்—அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு"

டி. கே. சண்முகம்
பொறுப்பாசிரியர்
'நடிகன் குரல்'

போட்டியிட்ட அபேட்சகர்களின் கவனத்திற்கு:

தேர்தல் கணக்கு அறிக்கை தாக்கல்

சட்ட நிலை பற்றி ஒரு விளக்கம்

தேர்தல் செலவுகள் சம்பந்தமான கணக்கு அறிக்கையைத் தாக்கல் செய்வது பற்றி தற்போதைய சட்டநிலை என்ன என்று விளக்கம் கேட்டு சமீபத்தல், மக்கள்சபைக்கும் மாநில சட்டசபைகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடமிருந்து தேர்தல் கமிஷனுக்கு வந்துள்ள கோரிக்கைகளை ஒட்டி கீழ்க்கண்ட விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

சட்ட நிலை இதுதான்: 1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 77-வது பிரிவில் ஒவ்வொரு அபேட்சகரும் அல்லது அவரது தேர்தல் ஏஜெண்டும் தேர்தல் சம்பந்தமாக உள்ள சகல செலவுகளுக்கும் தனிப்பட்ட சரியான கணக்குவைத்து வரவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது; அந்தச் செலவு தேர்தல் சம்பந்தமான அறிவிப்புத் தேதி முதல் வாக்கெடுப்பு பூர்த்தியாகி வோட்டுக்கள் எண்ணப்பட்டு 'ரிட்டர்னிங் ஆபீசர்' தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் தேதிவரை அபேட்சகர் அல்லது அவரது தேர்தல் ஏஜெண்டு செலவு செய்ய நேர்ந்த அல்லது செலவு செய்ய அனுமதித்த, தொகைகள் சம்பந்தமான கணக்குகளை அப்படியே வைக்கப்படுவர வேண்டும்.

கணக்கு விவரங்கள்

அபேட்சகர் வைத்துவருகிற கணக்கில் காணப்படும் ஒவ்வொரு செலவினம் சம்பந்தமாகவும் பின்வரும் விவரங்கள் இருக்க வேண்டும்: (அ) அந்தச் செலவு செய்யப்பட்ட அல்லது செய்ய அனுமதிக்கப்பட்ட தேதி; (ஆ) செலவின் தன்மை (உதாரணமாக, பிரயாணச செலவு, தபால் செலவு, அச்சடிப்புச் செலவு); (இ) செலவுத் தொகை, இதில் உண்மையாகச் செலவிடப்பட்டதும், கொடுக்கவேண்டிய பாக்கியும் அடங்கும்; (ஈ) பணம் கொடுத்த தேதி; (உ) பணம் பெற்றுக்கொண்டவரின் பெயரும்,விலாசமும்; (ஊ)தொகைகள் கொடுக்கப்பட்ட விஷயத்தில் பற்றுச்சீட்டுகளின் (வவுச்சர்) வரிசை எண்ணிக்கை; (எ) பாக்கியாக நிற்கும் தொகையிருந்தால் அது சம்பந்தமான பில்களின் வரிசை எண்ணிக்கை; (ஏ) பாக்கி கொடுக்கவேண்டியவரின் பெயரும், விலாசமும்.

அச்சட்டத்தின் 78-வது பிரிவுப்படி போட்டியிடும் ஒவ்வொரு அபேட்சகரும், 55-(ஏ) பிரிவுப்படி விலகிவிடுகிற அபேட்சகர் உட்பட, தாம் வைத்துவரும் தேர்தல்செலவுக் கணக்குக்கு, உண்மையான நகல் ஒன்றை 'ரிட்டர்னிங் ஆபீசரி'டம் தாக்கல் செய்ய வேண்டும். ஒரு அபேட்சகரின் நியமனப் பத்திரம் நிராகரிக்கப்பட்டாலோ அல்லது 'வாபஸ்' பெறுவதற்கு நிர்ணக்கப்பட்ட கடைசித் தேதிக்குமுன் போட்டியிலிருந்து 'வாபஸ்' பெற்றுவிட்டாலோ, அவர் அத்தகைய கணக்கு எதையும் தரவேண்டியதில்லை. ஆனால் 'வாபஸ்' வாங்குவதற்கான கடைசித் தேதிக்குப் போட்டியிலிருந்து விலகுகிற ஒரு அபேட்சகர் அக்கணக்கைத் தாக்கல் செய்ய வேண்டும் என்று சட்டம் விதிக்கிறது. அசல் கணக்கை அபேட்சகரோ அல்லது அவரது ஏஜெண்டோ வைத்துக்கொள்ள வேண்டும்; அதன் உண்மையான நகலை, அந்த அபேட்சகர் தேர்ந்தெடுக்கப்பட்டால், தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து 30 தினங்களுக்குள்ளும், அத்தொகுதியிலிருந்து இரண்டு அபேட்சகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட தினங்கள் வெவ்வேறாக இருந்தால், அவைகளில் பிந்திய தேதியிலிருந்து 30 தினங்களுக்குள்ளும் தாக்கல் செய்ய வேண்டும்,

தடைகள்

1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 7-(சி) பிரிவுப்படி, போட்டியிட்ட ஒரு அபேட்சகர் உரிய காலத்தில்தான் வைத்துவரும் கணக்குக்கு உண்மையான நகல் ஒன்றைத் தாக்லே் செய்யத் தவறினால், அவர் அக்கணக்கைத் தாக்கல் செய்யவேண்டிய தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலத்துக்கு அந்தச் சட்ட சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவரென்று தானாகவே தடை ஏற்பட்டு விடும்.

இந்தத் தடையைத் தேர்தல் கமிஷன் அகற்றலாம்; அச்சட்டத்தின் 8 (1) (பி) பிரிவுப்படி அந்தத் தடையானது, தேர்தல் கமிஷன் அவரது தேர்தல் கணக்குகள் சட்டப்படிக்கான காலத்திலும், நீதியிலும் சமர்ப்பிக்கப்படவில்லையென்று முடிவு செய்கிற தேதியிலிருந்து இரண்டு மாதங்கள் முடிவது வரையில் அமுலுக்கு வராது.

கணக்கின் உண்மையான நகலை சமர்ப்பிப்பதற்குக் குறிப்பிட்ட எந்த நடைமுறையும் வகுக்கப்படவில்லை. அது உரிய தேதிக்குள், 'ரிட்டர்னிங் ஆபீசரு'க்குக் கிடைத்துவிட்டால், அதை அபேட்சகர் அல்லது அவரது தேர்தல் ஏஜெண்டு நேரடியாக 'ரிட்டர்னிங் ஆபீசரி'டம் கொடுத்தாரா அல்லது தபால் மூலம் அனுப்பினாரா என்பது பற்றி அக்கறையில்லை. அது கணக்குத் தாக்கல் செய்யப்படவேண்டிய கடைசித் தேதிக்கு, மிக நெருக்கமான ஒரு தேதியில் தபாலில் சேர்க்கப்பட்டு தபால் வந்து சேர்வதில் காலதாமதம் ஏற்பட்டால், தபால் சுணக்கம் சரியான முகாந்திரமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

அபேட்சகர் கணக்கில் கட்டாயம் கையெழுத்திட்டிருக்க வேண்டுமென்பது இல்லை; ஆனால் 'ரிட்டர்னிங் ஆபீசரு'க்கு அவர் தந்த கணக்கு 1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின், 77-வது பிரிவுப்படி அவர் அல்லது அவரது ஏஜெண்டு வைத்திருக்கும் கணக்குக்கு உண்மையான நகல் அது என்று அவர் எழுத்து மூலமாய் அத்தாட்சி கூறவேண்டும். இந்த அத்தாட்சியைக் கணக்கோடு சேர்த்தே எழுதுவது நல்லது; ஆனால் கணக்கை 'ரிட்டர்னிங் ஆபீச'ருக்கு அனுப்பும்போது எழுதப்படுகிற கடிதத்தில் அதை எழுதியிருந்தாலும் போதும்.

சென்னை சட்டசபைக்கு போட்டியிடுவோர் ரூ. 9000 வரை செலவிடலாம் எனவும், மக்கள் சபைக்குப் போட்டியிடுவோர் ரூ. 14,000 வரை செலவிடலாம் எனவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.